# DIOCESAN CIRCULAR LETTERS

No.C.02/2022 03.02.2022

## பாலர்சபை நாள் – 13.02.2022
## ஆயர் சுற்றுமடல்

**அன்பிற்கினிய குழந்தைகளே, சகோதரிகளே, சகோதரர்களே, உங்கள் எல்லோருக்கும் பாலர்சபை சிறப்பு நாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.**

பிப்ரவரி மாதம் 13ஆம் நாள், ஞாயிறன்று பாலர்சபை நாளை நாம் திருஅவையுடன் இணைந்து கொண்டாடுகின்றோம். குழந்தைகளை அன்பு செய்யாதவர்கள் யாரும் இல்லை. குழந்தைகளின் மென்மையான உணர்வுகளையும் எளிமையான பேச்சுக்களையும் காணும்போது நாமும் மென்மையும் எளிமை உணர்வும் பெறுகின்றோம். அவர்களது புன்னகை அழகும் எளிதாக அழுதுவிடும் மாசறுநிலையும் நம்மை அக்களிக்க வைக்கின்றன. இந்தச் சிந்தனையைப் பிரதிபலிக்கும் வகையில் “சிறுபிள்ளையைப் போலத் தம்மைத் தாழ்த்திக் கொள்பவரே விண்ணரசில் மிகப் பெரியவர்” (மத் 18:4) என இயேசு கூறுகிறார். அதாவது, சிறுவர்களின் நற்பண்புகளைப் பெரியவர்கள் இழந்துவிடாது காத்துக் கொள்ளவேண்டும் என்பதாகும். திருத்தந்தை பிரான்சிஸ், “புன்னகைப்பதற்கும் அழுவதற்கும் குழந்தைகள் நமக்குக் கற்றுத்தரமுடியும்” எனக் கூறுகிறார். குழந்தைகள் எதிர்காலப் பெரியவர்கள். முன்னோக்கி நடைபோடுவதற்கு அவர்கள் வலிமை வழங்குகிறார்கள். அவர்கள் மீது நாம் நம்பிக்கை வைக்கிறோம். எனவே, இப்பாலர்சபை நந்நாளில் நாம் நமது குழந்தைக்கால நற்பண்புகளை இழந்துவிடாது காத்துக்கொள்வோமாக.

**குழந்தைகள் சந்திக்கும் சவால்கள்**

‘குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று’ என்று நாம் போற்றினாலும் அவர்கள் அச்சமின்றி, சுதந்திரமாகவும் மகிழ்வாகவும வாழ்வதற்குப் பல தடைகள் இருக்கின்றன. கட்டுப்பாடுகளற்ற, ஒழுங்குபடுத்தப்படாத ஊடகக் காட்சிகள், பெரியவர்களின் எதிர்மறைச் சான்றான வாழ்க்கைமுறை, குழந்தைகளைக் கடத்திச் சீரழித்தல், அவர்களைப் பிச்சையெடுக்கவும் கடின உடல் உழைப்பிலும் ஈடுபடுத்தல் போன்ற இன்னும் பல தீமைகளை பிஞ்சுவயதிலேயே நமது குழந்தைச் செல்வங்கள் சந்தித்து எதிர்நீச்சல் போடவேண்டிய சூழலுக்குத் தள்ளப்படுகிறார்கள். இவற்றால் அவர்களுடைய மகிழ்ச்சி மற்றும் வளர்ச்சி பெரிதும் தடைபட்டுவிடுகிறது. அதோடு, பெற்றோரை இழந்து நிர்க்கதியாகிக் காப்பகங்களில் வாழ்ந்தும் தெருக்களில் சுற்றித் திரிந்து பிச்சையெடுக்கும் பெருமளவிலான குழந்தைகளை நாம் கண்கூடாகக் கண்டு வருகின்றோம்.

இச்சூழ்நிலையில் மகிழ்வான குழந்தைப்பருவ வாழ்வோடு சேர்த்து தங்களையும் தாங்கள் வாழ்கின்ற சமூகத்தில் பரந்துகிடக்கும தீமைகளையும் உணர்ந்து விழிப்புடன் செயல்படும் பக்குவத்தை அவர்கள்

பெறவேண்டும். குழந்தைகளின் புரிந்துகொள்ளும் திறனுக்கேற்ற பயிற்சிகளும் வழிகாட்டுதல்களும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக, அவர்களுக்கான Childline 1098 மற்றும் POCSO சட்டம் போன்ற பாதுகாப்பு வாய்ப்புகளைப் பற்றிய விழிப்புணர்வு வழங்கப்பட வேண்டும்.

தங்கள் பாசக் குழந்தைகளுக்காக முழுமையாக உழைக்கும் தாய் தந்தையர் அனுபவிக்கும் சிரமங்களையும் தியாக வாழ்க்கையையும் குழந்தைகள் அறியச் செய்யவேண்டியது பெற்றோரின் கடமையாகும். ஆன்மீக வாழ்வுக்கும் அறநெறி பண்புகளைப் பின்பற்றுவதற்கும் உரிய வழிகாட்டுதல்களைப் பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் ஊட்டி வளர்க்க வேண்டிய பொறுப்புடையவர்களாவர்.

**குழந்தைகளும் நற்செய்தியாளர்களே**

குழந்தைகளாக இருக்கும் போதே நற்செய்தி அறிவிப்பாளர்களாக அவர்கள் மாற முடியும் என்கின்ற நம் திருத்தந்தை பிரான்சிஸ், 1843ஆம் ஆண்டில் பாலர்சபையைத் தோற்றுவித்த பிரான்ஸ் நாட்டு ஆயர் சார்லஸ் தே போர்பின் அவர்கள்கூட ‘குழந்தைகள் குழந்தைகளுக்கு நற்செய்தி அறிவிப்பாளர்களாகவும் மற்றவர்களுக்காக செபிப்பவர்களாகவும், உலகில் துன்புறும் குழந்தைகளுக்கு உதவி செய்பவர்களாகவும மாறவேண்டும்’ என்ற நோக்கத்தை முன்வைத்திருந்ததைத் தனது இவ்வாண்டு நற்செய்தி அறிவிப்பு நாள் செய்தியில் சுட்டிக்காட்டியுள்ளார். இவ்வாறு குழந்தைகள் திருஅவையின் நற்செய்தி அறிவிப்புப் பணியில் பங்கேற்கிறார்கள்.

**நமது மறைமாவட்டத்தில்**

நமது மறைமாவட்டத்தில் குழந்தைகள் அல்லது சிறார் பணிக்குழு கடந்த பலஆண்டுகளாகச் சிறப்பாகச் செயல்பட்டுப் பிற மறைமாவட்டங்களுக்கு முன்னோடியாகவும் திகழ்ந்து வருகிறது. இப்பணியை முன்னெடுத்துச் செல்லும் அனைவரையும் பாராட்டுகின்றேன். நமது பங்குகளில் வாழும் அனைத்துக் குழந்தைகளையும் பங்குகளில் செயல்பட்டுவரும் சிறார் குழுக்களில் இணைத்துப் பயிற்சிபெறச் செய்யவேண்டுமெனவும் பெற்றோரும் பங்கு இறைச்சமூகமும் இப்பணியில் தனிக்கவனம் செலுத்திடவும் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த நாளில் உங்களது சிறப்புக் காணிக்கையைச் செலுத்தும் படியும் இதனைப் பங்கு நிர்வாகம் மறைமாவட்டப் பொருளரிடம் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ள வேண்டுமெனவும் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

“சிறுபிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள்; அவர்களைத் தடுக்காதீர்கள்; ஏனெனில், விண்ணரசு இத்தகையோருக்கே உரியது” என மொழிந்த நம் ஆண்டவர் இயேசுவின் ஆசியில் நம் குழந்தைகள் மகிழ்வார்களாக!

கிறிஸ்துவின் மனநிலையில்

Sd/-

**+ ஆயர் நசரேன் சூசை**

கோட்டாறு மறைமாவட்டம்